# சுந்தர காண்டம்
# நவரத்ன மந்த்ர மாலா




**M.K. VENKATARAMAN, M.A.**

  

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள்
ஸ்ரீமடம் ஸம்ஸ்தானம், காஞ்சிபுரம்

# ஸ்ரீமுகம்

காஞ்சிபுரம் 16—10—92

அவதார புருஷனாம் ஸ்ரீராமசந்திரனது சரித்ரமாகிய ஸ்ரீமத்ராமாயணம் வேதமாகவே கொள்ளப்படுவது. இதனது ஸுந்தரகாண்டமோ மந்த்ரப்ரபாவமுடையதாக அனுபவிக்கப்பட்டு வருவது.

இதிலுள்ள 9 சுலோகங்களைத் தேர்ந்தெடுத்து "ஸ்ரீஸுந்தர காண்ட நவரத்ன (மந்த்ர) மாலா" என்ற பெயரில் நவக்ரக ப்ரீதிகரமான 9 நவரத்னங்களின் ஸ்தானத்தைக் கொடுத்து தினசரி பாராயணத்துக்குப் பயன்படும் வகையில் இலவச வெளியீடாக வழங்குகிறார் சென்னை ஸ்ரீ மா. கி. வேங்கடராமன். இவ்வரிய உபகாரம் செய்யும் இவருக்கு ஸ்ரீ ஸீதா ராமசந்திரனது பேரருளால் ஸகல ச்ரேயஸ்ஸும் கிட்ட ஆசீர்வதிக்கிறோம்.

**நாராயண ஸ்ம்ருதி:**

உ

ஸ்ரீ கணேசாய நம:

ஸ்ரீ ராமாய நம:

## சுந்தர காண்டம்

# நவரத்ன மந்த்ர மாலா

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் முதன் முதலாக தோன்றிய காவியம். ஆகவே அதனை ஆதிகாவியம் என்பர். காலம் காலமாக மனித இனத்தை ஈர்த்த அமர காவியம். அவதார புருஷனான ஸ்ரீ ராமனின் வரலாற்றை விவரிக்கும் வாயிலாக பல உயரிய நன்னெறிகளை அறிவுறுத்தும் அறநூல். அது வேதஸாரம். ஒவ்வொரு சுலோகமும், ஏன், ஒவ்வொரு அக்ஷரமும் மிகப்புனிதம் வாய்ந்தது. அது பாரத தேசத்தின் அரும் பெரும் பொக்கிஷம்.

தொன்று தொட்டு ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஒவ்வொரு குடும்பத்திலும் நமது முன்னோர்களால் அனுதினமும் பாராயணம் செய்யப்பட்டு வந்தது. முக்கியமாக, சுந்தரகாண்ட பாராயணம் விசேஷமாக கருதப்பட்டு வந்தது. இதற்கான வழிபாட்டு பாராயண முறைகள் விசேஷமாக உள்ளன. இக்காலத்தில் அவை பெரும்பாலும் சிரமசாத்தியமாக உள்ளன. மேலும், பெரும்பாலோருக்கு ஸம்ஸ்க்ருத பாஷை பரிச்சயம் இல்லை. அன்றாட அலுவல்களுக்கிடையே போதிய நேரமும் அவகாசமும் இருப்பதில்லை. ஆனாலும் ஓரளவாவது பாராயணம் செய்யவேண்டும் என்று பலருக்கு விருப்பம் உண்டு. ஆகவே, இப்படிப் பட்ட சூழ்நிலையில் எளிய முறைகள் வரவேற்கப்படு கின்றன. "அல்பப்ரயாஸம் அனல்பபலம்" என்று

ஸ்ரீ சங்கரர் சொன்னார். அதாவது, மிகச்சிறிதளவே முயற்சி செய்து மிகப் பெரிய பலன்களை அடைவது எப்படி என்பது தற்கால மனிதனின் குறிக்கோள். இதை மனதில் கொண்டு இந்த சிறிய தொகுப்பு வெளியிடப்படுகிறது. இந்த தொகுப்பில் சுந்தர காண்டத்தின் ஸாராம்சமாக ஒன்பது சுலோகங்களே உள்ளன. இதைப் பாராயணம் செய்ய ஒன்று அல்லது இரண்டு நிமிடங்களே போதுமானது. பக்தி சிரத்தை, முழு நம்பிக்கை, ஒருமைப்பட்ட மனம் இவைகள் தான் தேவை. இதை மனப்பூர்வமாக பாராயணம் செய்து விவாஹம், உத்தியோகம், வியாபாரம், அட்மிஷன் போன்றவற்றில் கைமேல் பலன் கிட்டியதாக எனது நண்பர்கள், உறவினர்கள் வாயிலாக நான் கேட்டறிந்தது அனுபவ சித்தமான விஷயம். இதே போன்று யாவரும் இதன் மூலம் கண்கூடாகப் பல பயன்கள் அடையலாம் என்பது திண்ணம்.

இந்த நவரத்ன மந்த்ர மாலையை நான் தொகுக்க நேர்ந்தது, ஒரு தெய்வாதீனமான செயலாகும். என் மனக்கருத்தினை அடிக்கடி வெகுவாக கவர்ந்த சுலோகங்கள் சிலவற்றை வரிசையாக நினைவுபடுத்திக் கொண்டேன். ஸ்ரீ ராமனின் தெய்வத் திருவருளால் ஒன்பது சுலோகங்கள் என் மனத்திரையில் பளிச்சென்று தோன்றின. அதுவே எனக்கு விவரிக்கவொண்ணாத (அந்த: ஸ்புரணம்) ஞானபோதம் ஆயிற்று. அந்த சுலோகங்களையே அடிக்கடி மனதில் நிலைநிறுத்தி அவற்றின் பின்னணி, உட்கருத்து ஆகியவற்றை ஆராயப் புகுந்ததில் பல அபூர்வ விஷயங்கள் என் ஆழ்மனத்தில் புலப்பட்டன. இந்த ஒன்பது சுலோகங்களும் சுந்தர காண்டம் முழுவதையுமே ஸாரமாக உள்ளடக்கிக் கொண்டிருந்தன. முடிவில் ஸ்ரீ ராம பட்டாபிஷேகமும் மங்களகரமாக வாய்த்திருந்தது. இந்த ஒன்பது சுலோகங்களும் விலைமதிக்கவொண்ணாத ஒன்பது ரத்தினங்களாகவே என்

இதயத்தில் ஒளிவீசி மிளிர்ந்தன. மேலும் ஒன்பது ரத்தினங்களும் ஒன்பது கிரகங்களுடன் எப்படி தொடர்புடையனவோ அவ்வாறே இந்த ஒன்பது சுலோகங்களும் ஒன்பது கிரகங்களின் பல்வேறு குண குணங்கள், பலாபலன்கள் ஆகியவற்றுடன் தொடர் புடையனவே என்றும் புலப்பட்டன. ஆகவே, ஒன்பது கிரகங்களின் அனுகூலத்தையும், அனுக்ரகத்தையும் பெற்று கிரகதோஷங்கள் நீங்கவும் பயனுள்ளன என்றும் தோன்றியது.

சுலோகம் என்பது வால்மீகி, வியாஸர் போன்ற மஹான்களின் மன உணர்வுகளின் ஒலி வடிவமே. வால்மீகி ராமாயணம் 24,000 சுலோகங்கள் கொண் டது. எல்லா மந்த்ரங்களுக்கும் தாயாக கருதப்படும் காயத்ரீ மஹாமந்த்ரத்தில் உள்ள 24 அக்ஷரங்களு டைய விரிவே (அதாவது ஒவ்வொரு அக்ஷரத்துக்கும் 1000 சுலோகங்கள்) வால்மீகி ராமாயணம் என்று கருதப்படுகிறது. ஆகவே ஒவ்வொரு சுலோகமும் மஹாமந்த்ரமாகவே கருதப்படுகிறது. அது மட்டு மல்லாமல், ஒவ்வொரு சுலோகத்திலும் (சராசரியாக 32 அக்ஷரங்கள் கொண்டது ஒரு சுலோகம்) உள்ள ஒவ்வொரு அக்ஷரமும் (எழுத்தும்) மிகப் பெரிய பாவங்களைத் துடைக்கும் மகத்துவம் பெற்றது என்று ஆன்றோர்களால் போற்றப்படுகிறது. (''ஏகைகம் அக்ஷரம் ப்ரோக்தம் மஹா பாதக நாசனம்''). ''அக்ஷர லக்ஷம்'' என்பது ஒரு முதுமொழி. அதாவது ஒவ்வொரு அக்ஷரமும் லக்ஷம் பொற்காசுகளுக்கு ஈடான மதிப்பு உடையது என்பது பொருள். இக்கார ணங்களினுல் ராமாயண சுலோகம் ஒவ்வொன்றுமே மதிப்பிட முடியாத மந்த்ரம் என்று சொன்னுல் மிகை யாகாது. ஒவ்வொரு மந்த்ரமும் அபரிமிதமான சக்தி களை உள்ளடக்கியது. மந்த்ரம் என்ருலே தன்னை நினைத்துப்பார்ப்பவனை (உபாஸகனை)க் காப்பாற்றும்

சக்தி படைத்தது என்பது பொருள். ("மந்தாரம் த்ராயதே இதி மந்த்ர:")

இந்த நவரத்ன மந்த்ரமாலையில் உள்ள ஒவ்வொரு மந்த்ரத்திற்கும் பற்பல நன்மைகளைப் பயக்கும் சக்திகள் உள்ளன. பலவித மனோபீஷ்டங்கள் நிறைவேறும். சில குறிப்பிட்ட மனோபீஷ்டங்கள் நிறைவேற அந்தந்த மந்த்ரங்களை பலதடவை (உதாரணமாக 9, 27, 108) சொன்னால் நல்ல பயன்கள் ஏற்படும். பொதுவான குடும்ப நலன்களுக்கும், பொதுவான மேம்பாட்டிற்கும் எல்லா மந்த்ரங்களையும் சேர்த்து ஒட்டுமொத்தமாக (ஸம்பூர்ணமாக) ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது சொல்லிப்பயன் பெறலாம். இதன் மூலமாக சுந்தரகாண்டம் முழுவதையுமே ஸாங்கோபாங்கமாக பாராயணம் செய்த பலனுக்கு ஈடாக மிக எளிய முறையில் பயன் பெற்று விடலாம். பக்தி, சிரத்தை, தீவிர நம்பிக்கை இவைதான் முக்கிய அடிப்படை. தினமும் வெகு சில நிமிஷங்களே போதுமானது. இதை வீட்டில் இருப்பவர்கள் ஒவ்வொருவரும் படிக்கவேண்டும். இதன் சிறப்புகளைச் சொல்லி தங்கள் குழந்தைகள், உறவினர்கள், நண்பர்களிடமும் பிரசாரம் செய்து மற்றவர்களுக்கும் நல்ல பயன்களைப் பெறும் வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்."

ஸாராம்சம் என்பதை "ரத்னச்சுருக்கம்" என்று கூறுவது வழக்கில் உள்ளது. அதன்படியே இந்த தொகுப்பு ஒரு சுருக்கம் மாத்திரம் அல்ல, பொறுக்கி எடுத்த, விலையுயர்ந்த நவமணிகள் (ஒன்பது நவரத்னங்கள்) வைத்து பதிக்கப்பட்ட ஒரு அபூர்வ நவரத்னஹாரமாகும். இந்த நவரத்னமாலையை அனுதினமும் ஸ்ரீராமபிரானுக்கு அணிவித்து இன்புறுவோமாக.

மா. கி. வெங்கடராமன், M.A.

1

## மாணிக்யம்

ततो रावणनीतायाः सीतायाः शत्रुकर्शनः ।
इयेष पदं अन्वेष्टुं चारणा-चरिते पथि ॥

ததோ ராவணநீதாயா:
ஸீதாயா: சத்ருகர்சன: ।
இயேஷ பதம் அன்வேஷ்டும்
சாரணு-சரிதே பதி ॥ 1-1

பின்னணி—ஸ்ரீராமனின் கட்டளைப்படி சீதையைத் தேடிவந்த வானர சைன்யம் தென்சமுத்திரக் கரை வந்து சேர்ந்தது. கடலைத் தாண்டுவது எப்படி என்ற கவலையில் சோர்ந்து விட்டார்கள். அப்பொழுது ஜாம்பவான் அனுமனுக்கு அவனுள் உறங்கிக் கொண்டிருக்கும் அளப்பரிய செயல் ஆற்றலை நினைவு படுத்தி அவனை புத்துணர்ச்சியுடன் வீறுகொண்டு எழச் செய்கிறுர். அனுமன் கடலைத் தாண்டி லங்கை சென்று சீதையைக் கண்டுபிடித்து வெற்றிவாகை யுடன் திரும்பவேண்டும் என்று சித்தம் கொள்கிறுன்.

இந்த மந்த்ரத்தின் மையக் கருத்து:—"சத்ருக்கள் யாவரையும் நிர்மூலமாய் அழிக்கக்கூடிய ஆற்றல் படைத்தவன் அனுமன். ராவணன் சீதையை ஆகாச மார்க்கமாய் அபகரித்துச் சென்றுன். அந்த வானவீதி சித்தசாரணர்கள் ஸஞ்சரிக்கும் பாதை. சீதையைக் காண அதே வானவீதியின் வழியாக கடலைக்கடக்க அனுமன் விருப்பம் கொண்டான்."

விசேஷக் குறிப்பு:—இந்த மந்த்ரம் சுந்தரகாண்டத்தின் முதல் சுலோகம். ராமாயணத்தின் மையப்பகுதியாக 12,000 சுலோகத்தின் ஆரம்பத்தில் வருவதாகவும், 24 அக்ஷரங்கள் கொண்ட காயத்ரீ மந்த்ரத்தின் கருப்பகுதியான 12-வது வர்ணத்திற்கு இணை ஸ்தானத்தில் இந்த மந்த்ரம் அமைந்திருப்பதாகவும் ஸ்ரீ கோவிந்தராஜீயரின் வியாக்கியானத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, ராமாயணத்திலேயே இந்த மந்த்ரம் நடுநாயகமானது என்பது இதன் தனிச் சிறப்பு. இதுவே ராமாயணத்தின் ஹ்ருதயம்; ஏன், காயத்ரீயின் ஹ்ருதயமும் இதுதான். ஆன்மீக ரீதியில் இந்த மந்திரத்திற்கு ஆழ்ந்த உட்கருத்து உண்டு. ஸ்ரீராமன் பரப்ரம்ம ஸ்வரூபம். சீதை அந்த பரப்ரம்மத்தினின்று பிரிந்து நின்ற ஜீவனைக் குறிக்கிறது. அந்த ஜீவன் மறுபடியும் பரப்ரம்மத்துடன் சேர்ந்து இணைய ஏக்கம் கொள்கிறது. அதற்கு ஒரு ஆசாரியனின் அருள் உதவி தேவைப்படுகிறது. இங்கே அந்த ஆசாரியன் ஸ்தானத்தில் இருப்பது சாக்ஷாத் அனுமனே. ஆகையால் மறைமுகமாக இந்த மந்த்ரம் அனுமனின் சிறப்பையே விசேஷித்துக் கொண்டாடுகிறது.

நவக்ரஹ—நவரத்னத் தொடர்பு:

காயத்ரீ மந்த்ரத்தினல் ப்ரதிபாதிக்கப்பட்ட கடவுள் ஸூர்ய பகவானே. ஆகாய மார்க்கம் என்பது ஸூர்யனின் வீதி. அனுமன் ஸூரியனின் சீடன். ஆகையால் அந்தப் பாதை அவனுக்கு முன்பே பரிச்சயமானது. ஆகையால் எல்லா வகையிலும் இந்த மந்த்ரம் ஸூரியக்ரகத்துடன் தொடர்புடையது. அந்த கிரகத்திற்கு உகந்த ரத்தினம் மாணிக்யம். நவரத்ன மந்த்ர மாலையில் அந்த ரத்தினத்தின் ஸ்தானத்தை ஏற்கிறது.

பலசுருதி. இந்த மந்த்ரத்தின் பலன்கள்:— முயற்சி திருவினையாக்கும். அந்த முயற்சிக்கு தெய்வானுகூலம் கூடும்; முடிவில் காரியசித்தி கிட்டும்; புத்தி நல்ல சன்மார்க்க வழியில் செல்லும். அதுவே வெற்றியின் பாதையும் ஆகும். சூர்ய கிரகத்தின் அருளால் திட ஆரோக்யம், ஒளிமயமான எதிர் காலம் ஆகியவை சித்திக்கும்.

## 2

## முத்து

**यस्य त्वेतानि चत्वारि वानरेन्द्र यथा तव ।**
**स्मृतिर्मतिर्धृतिर्दाक्ष्यं स कर्मसु न सीदति ।।**

யஸ்ய த்வேதானி சத்வாரி
வானரேந்த்ர யதா தவ ।
ஸ்ம்ருதிர் மதிர் த்ருதிர் தாக்ஷ்யம்
ஸ கர்மஸு ந ஸீததி ।। 1-199

அனுமன் முயற்சியில்தான் எத்தனை சோதனைகள்? ஆரம்பத்திலேயே பெருங்கடல் எதிர்நோக்கி இருக்கிறது; பிறகு மைனாகம் என்ற மலை திடீரென்று ஆழ்கடலிலிருந்து வெளிக் கிளம்பி அவன் வழியை மறிக்கிறது; அதன் பிற்பாடு ஸுரஸா என்ற நாக மாதா ப்ரம்மாண்டமான உருவம் எடுத்து 'என் வாயில் புகாமல் மீள முடியாது' என்று அச்சுறுத்துகிறாள். பிறகு சாயாக்ராஹி என்ற ராக்ஷஸ பூதம் அவன் நிழலைப்பற்றியே தன் வாயில் விழுந்து விழும்படி செய்து விடுகிறாள். ஆனால் அனுமன் இந்த தடங்கல்கள் யாவையும் தனது மதி யூகத்தாலும், சமயோசித புத்தியினாலும், பராக்ரமத்தினாலும் வென்றுவிடுகிறான். இத்தகைய அசாத்திய சாஹஸங்களைக் கண்ணுற்ற

தேவர்கள் அனுமனை இந்த மந்த்ரம் வாயிலாக பாராட்டுகிறார்கள்.

''நினைவாற்றல், நுண்ணறிவு, விடாமுயற்சி, செயல் திறம் ஆகிய இந்த நான்கு உயர் குணங்கள் உன்னிடம் குடிகொண்டிருக்கின்றன. அதேபோல் எவனிடம் இந்த உயர் பண்புகள் உள்ளனவோ அவன் எந்த காரியத்திலும் தளர்வடைவதில்லை. வெற்றியே எய்துகிறான்.''

வெற்றியின் திறவு கோலாக இங்கே கூறப்பட்ட உயர்ந்த குணங்கள் மனதைச் சார்ந்தவைகள். மனோ வியவஹாரத்திற்கு அதிபதி கிருகம் சந்திரன். அவனுக்கு உகந்த ரத்தினம் முத்து. அந்த முத்தும் அனுமன் கடந்த கடலில் தோன்றியது. ஆகையால் இந்த மந்த்ரம் சந்திரன், முத்து இவைகளுடன் தொடர்பு கொண்டது.

நவரத்ன மாலையில் முத்து ஸ்தானத்தில் இருக்கும் இந்த மந்த்ரம் பற்பல பயன்களை அளிக்கவல்லது. இதனால் மனோபலம் பெருகும்; உத்தியோகம், வியாபாரம், படிப்பு போன்ற எல்லாக் காரியங்களிலும் தடைகள் நீங்கி வெற்றி கிட்டும்.

3

## பவழம்

**अनिर्वेदः श्रियो मूलं अनिर्वेदः परं सुखम् ।**
**अनिर्वेदो हि सततं सर्वार्थेषु प्रवर्तकः ॥**

அனிர்வேத: ச்ரியோ மூலம்
அனிர்வேத: பரம் ஸுகம் ।
அனிர்வேதோ ஹி ஸததம்
ஸர்வார்த்தேஷு ப்ரவர்தக: ॥ 10-12

அனுமன் லங்கையை அடைந்தவுடன் லங்கிணி அவனை எதிர்க்கிறாள். அவளை வென்று ராவணனின் அரண்மனை சென்று அங்கு அந்தப்புரம் உள்பட எல்லா இடங்களிலும் சீதையைத் தேடுகிறான். ஆனால் சீதை இருப்பிடம் புலப்படவில்லை. அனுமன் மனம் நொந்து சோர்வடைகிறான். அது ஒரு கணமே. உடனேயே மனத்தை தேற்றிக்கொண்டு புது உற்சாகத்துடனும் புது உத்வேகத்துடனும் மீண்டும் முயற்சியில் ஈடுபடுகிறான். இந்த மந்த்ரம் அனுமனின் புத்துணர்ச்சியை பிரதிபலிக்கிறது.

"உற்சாகமே எல்லா ஐசுவரியங்களுக்கும் அஸ்திவாரம்; உற்சாகமே பரமானந்தம்; அதுவே எல்லா முயற்சிகளிலும் மனிதனை உந்தி ஈடுபடுத்தும் சக்தி படைத்தது. உற்சாகமே வெற்றியின் திறவுகோல்".

இந்த மந்த்ரம் அனுமனின் திருவாக்கு. அவனுடைய அனுபவ முதிர்ச்சியின் பொன்மொழி; அவன் தனக்கே கூறிக்கொண்ட கீதோபதேசம். அது மனித சமுதாயத்தின் மேம்பாட்டிற்கே சொன்ன அறிவுரை. மனக்கவலைகளை எல்லாம் அகற்றும் அருமருந்து.

கடன் தொல்லைகள் போன்ற மனக்கவலைகளைப் போக்க வல்லவன் அங்காரகன். அவன் பூமாதேவியின் புதல்வன். அனுமன் சீதையைத் தேடித்திரிந்தது பூமியைச் சார்ந்த லங்காபுரியின் தரை நிலப்பிரதேசங்கள். அங்காரகன் பீடை ஏற்பட்டால் மனக்கவலைகள் ஏற்படும். ஆனால் அவன் அருள் கிட்டினால் கவலைகள் நீங்கி மங்களங்கள் உண்டாகும். (அங்காரகனுக்கு மங்களன் என்றும் பெயர்). ஆகவே இந்த மந்த்ரம் அங்காரக கிரகத்துடன் தொடர்பு கொண்டது. நவரத்னமாலையில் இந்த மந்த்ரம் அங்காரகனுக்குரிய பவழ மணியின் ஸ்தானத்தை அலங்கரிக்கிறது. இந்த மந்த்ரத்தை மனனம் செய்தால் மனக்கவலைகள்

நீங்கும்; புது உற்சாகம் பிறக்கும்; கடன் தொல்லைகள் அகலும்; செவ்வாய் தோஷம் நீங்கும்; மனத் தளர்ச்சியை அறவே ஒழிக்கும்; புது முயற்சிகளில் வெற்றி கிட்டும்; ஐசுவரியம் பெருகும்.

4

## மரகதம்

नमोऽस्तु रामाय सलक्ष्मणाय
देव्यै च तस्यै जनकात्मजायै ।
नमोऽस्तु रुद्रेन्द्रयमानिलेभ्यः
नमोऽस्तु चन्द्रार्कमरुद्गणेभ्यः ॥

நமோஸ்து ராமாய ஸலக்ஷ்மணாய
தேவ்யை ச தஸ்யை ஜனகாத்மஜாயை ।
நமோஸ்து ருத்ரேந்த்ர யமானிலேப்ய:
நமோஸ்து சந்த்ரார்க மருத்கணேப்ய:॥ 13-59

அனுமன் மீண்டும் மீண்டும் சீதையைத்தேடி அலைகிறான். இன்னும் காரியம் கைகூடவில்லை. மனம் நொந்து தற்கொலைகூட செய்து கொண்டு விடலாம் என்று ஒரு கணம் நினைக்கிறான். அப்பொழுது அவன் புத்தியில் திடீரென்று ஒரு தெளிவு ஏற்படுகிறது. தன் முயற்சிகளையே நம்பி தெய்வங்களை மறந்து விட்டோமே என்ற எண்ணம் அவன் புத்தியில் தோன்றுகிறது. ஆகவே எல்லா தெய்வங்களையும் நினைத்துப் பிரார்த்திக்கிறான். தனது ப்ரத்யக்ஷ தெய்வங்களாகிற ராமன், சீதை, லக்ஷ்மணன் ஆகியவர்களை முதலில் நினைத்து, பிறகு ருத்ரன், இந்திரன், யமன், வாயு, சந்த்ரன், சூரியன், மருத்கணங்கள் ஆகிய தெய்வங்களையும் பிரார்த்

தித்துக் கொள்கிறுன். அனுமனின் அந்த பிரார்த்தனே தான் இந்த மந்த்ரம்.

இந்த பிரார்த்தனேக்குப் பிறகுதான் அசோகவனம் அவன் பார்வையில் தென்படுகிறது. அதுவே அவனது வெற்றிப் பாதையில் கடைசி அடி வைப்பாக அமைகிறது. இந்த மந்த்ரம் "ராமதாரக மந்த்ரம்" என்று ஆன்ருேர்களால் போற்றப்படுகிறது. இதன் காரணமாகவே சுந்தர காண்டத்திற்கு அப்பெயர் அமைந்தது என்று சிலர் கூறுவர்.

புத்திக்கு அதிஷ்டான கிரகம் புதன். அவன் அனுக்ரஹம் இருந்தால், சமயம் வரும்போது புத்திக்கு நல்ல யுக்திகள் புலப்படும். ஆகவே இந்த மந்த்ரம் புதனுடன் தொடர்பு கொண்டது. அவனுடைய இஷ்ட ரத்னமான மரகத மணியாக (பச்சை ரத்னம்) நவரத்ன மாலேயில் இடம் பெறுகிறது.

இந்த மந்த்ரத்தின் பயனுக சகல காரியங்களிலும் சித்தி, தெய்வ அனுகூலம், சமயோசித புத்தி ஆகிய வற்றுடன் சீதா, ராம, லக்ஷ்மணர்களுடைய அனுக்ரஹத்துடன் அனுமனின் அனுகூலமும் சித்திக்கும்.

## 5

## புஷ்பராகம்

प्रियान्न सम्भवेद्दुःखं अप्रियादधिकं भवेत् ।
ताभ्यां हि वियुज्यन्ते नमस्तेषां महात्मनाम् ।।

ப்ரியான்ன ஸம்பவேத் து:கம்
அப்ரியாத் அதிகம் பவேத்।
தாப்யாம் ஹி வியுஜ்யந்தே
நமஸ்தேஷாம் மஹாத்மனும் ।। 26-50

அசோக வனத்தில் சீதையைக் கண்டு அனுமன் எல்லையில்லாத ஆனந்தம் அடைகிறான். ஆனால் அவள் அரக்கிகளின் மத்தியில் துன்பப்படுகிறாள். அவளைப் பார்த்து ஆறுதல் மொழிகூற அனுமன் எண்ணம் கொள்கிறான். அதற்குள் ராவணன் அங்கு வந்து தனது காமவேட்கையைச் சொல்லி சீதையை தன்வசப்படுத்த முயல்கிறான். அவள் அவனைத் துரும்பாக மதித்து புறக்கணிக்கிறாள். அவன் கோபம் கொண்டு இரண்டு மாதங்களுக்குள் மனம் மாறி தன் வசத்திற்கு உட்படாவிட்டால் கொன்று விடுவேன் என்று அச்சுறுத்தி, அரக்கிகளையும் ஏவி விட்டு திரும்புகிறான். அரக்கிகளின் சுடு சொற்களைக் கேட்டு சீதை மனம் வெதும்பி தற்கொலை செய்து கொள்ள நினைக்கிறாள் கற்புக்கரசியாயிருந்தும் தான் ராமனை விட்டுப் பிரிந்து வாடும் வேதனையை நினைத்து மனம் நோகுறாள். அப்பொழுது ஒரு உயரிய வேதாந்த அனுபவம் புலப்படுகிறது. அதன் கருத்தே இந்த மந்த்ரம்.

"தனக்குப் பிடித்தவற்றில் ஆசை வைப்பதால் (அவற்றை விட்டுப் பிரியும் போது) துக்கம் ஏற்படு கிறது. தனக்கு பிடிக்காதவற்றில் வெறுப்பு கொள் வதால் அந்த துக்கம் அதிகமாகிறது. ஆகையால் விருப்பு, வெறுப்பு இவைகளே எல்லா துன்பங்களுக் கும் மூலகாரணம். மஹான்கள் இந்த விருப்பு, வெறுப்புகளை வென்றூர்கள். ஆகையால் துன்பங்கள் அவர்களை பாதிப்பதில்லை. அப்படிப்பட்ட மஹான் களுக்கு நமஸ்காரம்."

சீதையின் இந்த அனுபவபூர்வமான வாக்கு வேதாந்தஸாரமாகும். பகவத்கீதையின் ஸாராம்சமே இதுதான். ஆகவே இந்த மந்த்ரத்தை நமக்கெல்லாம் சீதையின் கீதோபதேசமாகவே கருதலாம்.

மஹான்களை வணங்கிய மாத்திரத்திலேயே சீதைக்கு விடிவுகாலம் கிட்டுகிறது. அது திரிஜடா ஸ்வப்னம் வாயிலாக சூசகமாக உடனே உணர்த்தப் படுகிறது. அடுத்த சில கணங்களிலேயே அனுமன் அவள் முன்தோன்றி ஆறுதல் மொழிகள் கூறி துயர் நீக்குகிருன்.

இந்த மந்த்ரம் சீதையின் ஆன்மீக ஞானுபதேசம். ஆன்மீக முன்னேற்றத்துக்கு குருபகவான் அதிஷ்டான கிரகமாகும். ஆகவே இந்த மந்த்ரம் குரு கிரகத்துடன் தொடர்புடையது. குருகிரகத்திற்கு பிரியமான புஷ்பராகமணியாக இந்த மந்த்ரம் நவரத்ன மாலையில் பிரகாசிக்கிறது.

இந்த மந்த்ர உச்சாரணத்தினுல் மஹான்களின் பரிச்சயம் ஏற்படும்; ஸத்ஸங்கம் கிடைக்கும்; ஆன்மிக ஞானம் ஏற்படும்; விருப்பு, வெறுப்பு போன்ற உணர்வுகளைக் கடந்து வைராக்யம் ஏற்பட்டு பரமானந்தம் கிடைக்கும்.

## 6

## வைரம்

**रामः कमलपत्राक्षः सर्वसत्त्वमनोहरः ।**

**रूपदाक्षिण्यसम्पन्नः प्रसूतो जनकात्मजे ॥**

ராம: கமலபத்ராக்ஷ:
ஸர்வஸத்த்வ மனோஹர: ।
ரூபதாக்ஷிண்ய ஸம்பன்ன:
ப்ரஸூதோ ஜனகாத்மஜே ॥ 35-8

அனுமன் சீதையிடம், தான் ராமன் அனுப்பிய தூதன் என்று தெரிவித்துக் கொள்கிருன். ''புத்தி மதாம் வரிஷ்டம்'', அதாவது புத்திமான்களுக்குள்ளே

தன்னிகர் அற்றவன் என்ற கீர்த்திக்கு ஏற்ப, வெகு அழகாக பேசி ராம லக்ஷ்மணர்களின் க்ஷேமசமாசாரங்களைத் தெரிவித்து அவளுக்கு ஆறுதல் மொழிகள் கூறுகிருன். இருந்தாலும் சீதைக்கு அனுமனிடத்தில் முழு நம்பிக்கை ஏற்படவில்லை. அப்பொழுது ராமனின் அங்கலாவண்யங்கள், நடையுடை பாவனைகள், குணவிசேஷங்கள் ஆகியவற்றை துல்யமாக விவரிக்கிருன். இந்த மந்த்ரம் அந்த அழகிய வர்ணனையின் தொடக்கத்தில் வருகிறது.

''ஜனக மகாராஜாவின் அன்புப் புதல்வியே !

ராமனின் கண்கள் மிக அழகானவை; தாமரை மலரின் தளிர் இதழைப் போன்றவை; அவன் எந்த ஜீவனையும் (பிராணியையும் கூட) சுண்டியிழுக்கக் கூடிய வடிவழகன்; சம்பூர்ணமான அழகு, குணங்கள் இவற்றுடன் பிறந்தவன்''

இந்த வர்ணனைகள், ''சுந்தரன்'' என்றும் ஒரு பெயர் கொண்ட அனுமனின் திருவாக்கிலிருந்து உதிர்ந்தவை; அவை ராமனின் சௌந்தர்யத்தை பிரதிபலிக்கின்றன; அதுவும் சௌந்தர்ய தேவதையான சீதையிடமே கூறப்பட்டவை. இந்தக் காரணங்களிலுலேயே சுந்தரகாண்டத்திற்கு அப்பெயர் நிலை பெற்றது என்றும் கொள்வர் சிலர்.

இந்த வர்ணனைகளைக் கேட்டப் பிறகுதான் சீதைக்கு அனுமனிடத்தில் முழு நம்பிக்கை பிறக்கிறது. அதன் பிறகே அனுமனும் சீதைக்கு ராமனின் அங்குலியத்தை சமர்ப்பிக்கிருன். ஆகவே இந்த கட்டம் சுந்தர காண்டத்திலேயே வைரம்போல் ஒளிப்பிழம்பாக சுடர் விட்டுப் பிரகாசிக்கும் பகுதி. ஆகவே நவரத்னமாலையில் **வைரம்** ஸ்தானத்தை ஏற்கிறது. வைரமே **சுக்ர னுக்கு** உகந்த ரத்தினம். சுக்ரனை விடிவெள்ளி

என்பார்கள். இருள் சூழ்ந்த சீதையின் துயர் மனத்தில் இந்த மந்த்ரம் விடிவெள்ளியாக ஒளிவீசி, அவளுக்கு விடிவுகாலம் வந்துவிட்டது, ஒளிமயமான எதிர்காலம் கூடிய சீக்கிரத்திலேயே வந்து கொண்டிருக்கிறது என்பதை (சூரியோதயத்துக்கு முன் விடிவெள்ளி தோன்றுகிறது நோக்க) முன்கூட்டியே அறிவுறுத்து கிறது.

இந்த மந்த்ரத்தை உச்சாரணம் செய்பவர்களுக்கு தேஹ காந்தி, ஆரோக்கியம், நல்ல பண்புகள், யாவரையும் வசீகரிக்கும் அபூர்வ சக்தி, எல்லாவற்றிற் கும் மேலாக ராமனிடத்தில் அளவிலா பிரேமை ஆகியவை சித்திக்கும்.

## 7

## நீலமணி

**जयत्यतिबलो रामो लक्ष्मणश्च महाबलः ।**
**दासोऽहं कोसलेन्द्रस्य रामस्याक्लिष्टकर्मणः ॥**

ஜயதி அதிபலோ ராம:
லக்ஷ்மணச்ச மஹாபல: ।
தாஸோஹம் கோஸலேந்த்ரஸ்ய
ராமஸ்ய அக்லிஷ்ட கர்மண: ॥ 42-33

தான் வந்த காரியம் நிறைவேறி விட்டாலும் அனுமன் ராவணனுக்கும் அரக்கர்களுக்கும் பாடம் கற்பிக்க எண்ணுகிறான். அசோகவனத்தை சின்ன பின்னமாக்குகிறான். காவலர் படைகளை அழிக்கிறான். லங்காபுரியே அதிரும்படி ஜயகோஷம் செய்கிறான். அனுமனின் இடிமுழக்கமே இந்த மந்த்ரம்.

"ராமன் பெரிய பராக்ரமசாலி; லக்ஷ்மணன் ஒரு மாவீரன்; அவர்களுக்கே எப்பொழுதும் ஜயம் (வெற்றி); கோசல நாட்டு மன்னன் க்ஷேமத்தையே விளைவிப்பவன்; நான் அவனுடைய தொண்டன்."

இந்த ஜயகோஷம் அரக்கர்களுக்கு முதல் பாடம். சீதையை இதுகாறும் பிடித்திருந்த சனி ராவணனைப் பிடிக்க ஆரம்பித்துவிட்டான் என்பதனை பறைசாற்று கிறது. சனி விஷ்ணு பக்தன். இனிமேல் ராவணனை அவன் பிடிக்கப் போகிருன் என்பதனை இந்த மந்த்ரம் சூசகப்படுத்துகிறது.

கோசல நாட்டு மன்னன் என்று ராமனின் அடைமொழியாக இங்கே வருகிறது. இந்த அடைமொழி தசரத சக்ரவர்த்திக்கும் பொருந்தும். சனி பகவான் தசரத சக்ரவர்த்திக்கு விசேஷ அனுக்ரகம் செய்தவன் என்பது வரலாறு. ஆகையால் அவன் ராமனுக்கு அனுகூலம் செய்யத் தொடங்கி விட்டதை குறிப்பாக இங்கு உணர்த்துகிறது. சனி பரமேசுவரனையும் பிடிக்கக்கூடியவன். ஆனல் அதே சனி அனுமனை நெருங்கவும் முடியாது போயிற்று என்ற வரலாறும் இங்கே காணற்குரியது.

இந்த மந்த்ரம் நவரத்ன மாலையில் நீலமணி இடத்தைப் பெறுகிறது. அதுவே சனிக்கு இஷ்டமான ரத்தினமாகும்.

இந்த மந்த்ரத்தின் பயனுக சத்ருஜயம், காம குரோதாதி நீச குணங்கள் அழிவு, சனிபீடை விலகல், காரிய சித்தி முதலியன ஏற்படும்.

## 8

## கோமேதகம்

**यद्यस्ति पतिशुश्रूषा यद्यस्ति चरितं तपः ।**
**यदि वास्त्येकपत्नीत्वं शीतो भव हनूमतः ॥**

**யத்யஸ்தி பதிசுச்ருஷா**
**யத்யஸ்தி சரிதம் தப: ।**
**யதி வாஸ்தி ஏகபத்னீத்வம்** **53-28**
**சீதோ பவ ஹநூமத: ॥**

ராவணனால் ஏவி அனுப்பப்பட்ட ஜம்புமாலி, மந்திரி குமாரர்கள், ஐந்து சேனாபதிகள், அக்ஷகுமாரன் ஆகியோர்களையும் அவர்களுடன் வந்த அந்தனை படைவீரர்களையும் அனுமன் ஒருவனே வதம் செய்து விடுகிறான். இந்த்ரஜித்துடன் புரிந்த வீரயுத்தத்தில் ப்ரம்மாஸ்த்ரத்தினால் கட்டுண்டு ராவணசபைக்கு இழுத்துச் செல்லப்படுகிறான். அங்கே தான் ராம தூதன் என்றும் சீதையை ராமனிடத்தில் திருப்பி அனுப்பி ராமகோபத்திற்கு ஆளாகி அழிவு அடைய வேண்டாம் என்று ஹிதோபதேசம் செய்ய, ராவணன் வெகுண்டு அனுமனின் வாலைத் தீயிட்டுக் கொளுத்தி ஊர்வலமாக இழுத்துச் செல்லுமாறு கட்டளையிடு கிறான். அனுமனுக்கு தீங்கு நேர்ந்ததைக் கேட்ட சீதை துடி துடித்து அக்னிதேவனைப் பிரார்த்திக்கிறாள். அந்த பிரார்த்தனை தான் இந்த மந்த்ரம்.

"நான் பதிவ்ரதை என்பது உண்மையானால், நான் கற்புத் தவம் நோற்றது உண்மையானால், நான் ராமனுக்கு பிரியமான ஒரே மனைவி என்பது உண்மை யானால், அக்னி பகவானே ! அனுமனுக்கு (வெப்பம் நீங்கி) குளிர்ச்சி தருவாய்" என்பது இதன் கருத்து.

இந்த ப்ரார்த்தனை பலத்தினால் அக்னி அனுமனுக்கு தீங்கு விளைவிக்கவில்லை; மாறாக சந்தனம் போன்று குளிர்ச்சியையே விளைவித்தான்.

தோல் சம்பந்தமான சருமவியாதிகள் (தீப்புண் போன்றவை) நீங்க ராகு கிரகத்திற்கு பீடாபரிகாரம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மந்த்ர விசேஷத்தால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டும் அனுமனுக்கு ஒரு சிறு தீப்புண்கூட ஏற்படவில்லை. ஆகவே இந்த மந்த்ரம் ராகு கிரகத்துடன் சம்பந்தம் உடையது. ராகுவுக்கு பிரியமான கோமேதக ரத்தினமாக இந்த மந்த்ரம் நவரத்ன மாலையில் இடம் பெறுகிறது.

இந்த மந்த்ரபலத்தினால் உபாஸகனுக்கு எந்தவித தீ விபத்தும் ஏற்படாது; ஸ்த்ரீகளுக்கு மாங்கல்ய பலம் கூடும்; ஆதிபௌதிகமான பீடைகள் (அதாவது காற்று, மழை, தீ, பூகம்பம், தொற்று நோய்கள் போன்ற விபத்துகள்) ஏற்படாது; கணவன்மார்களுக்கு பிற ஸ்த்ரீகளிடம் சஞ்சலம் ஏற்படாது.

## 9

## வைடூர்யம்

**निवृत्तवनवासं तं त्वया सार्धमरिन्दमम् ।**
**अभिषिक्तमयोध्यायां क्षिप्रं द्रक्ष्यसि राघवम् ।।**

நிவ்ருத்த வனவாஸம் தம்
த்வயா ஸார்தம் அரிந்தமம் ।
அபிஷிக்தம் அயோத்யாயாம்
க்ஷிப்ரம் த்ரக்ஷ்யஸி ராகவம் ।। 68-28

அனுமன் லங்கை முழுவதையும் தீக்கிரையாக்கி விட்டு, சீதையிடம் விடை பெற்றுக்கொண்டு மறுபடி யும் கடலைத்தாண்டி வானரசைன்யத்தைச் சேர் கிறான். அவர்களுடன் சுக்ரீவனிடம் சென்று, ராம னிடம் ''கண்டேன் சீதையை'' என்று சொல்லி தனது லங்கா விஜயத்தைச் சுருக்கமாக கூறுகிறான். சீதை யின் துயரங்கள் நீங்க, அவளுக்கு நம்பிக்கையூட்ட தான் அவளிடம் சொன்னதாக ராமனிடத்தில் அனுமன் சொன்ன வசனமே இந்த மந்த்ரம்.

''மாது சிரோமணியே ! உனது கணவன் சத்ருக் களை அழிக்கப்போகும் பராக்ரமசாலி. அவன் வெற்றி பெறுவான், நீ அவனுடன் இணைவாய்; வனவாசம் பூர்த்தியாகி வெற்றி வீரனாக அயோத்தி திரும்பியதும் நீங்கள் இருவரும் அரியணையில் இணைபிரியாது வீற்றிருக்க பட்டாபிஷேகம் நிகழப் போகிறது.''

இந்த மந்த்ரம் சீதைக்கு மட்டிலும் சந்தோஷம் அளித்தது அன்று. இதைக்கேட்ட ராமனது மனதும் சந்தோஷம் அடைந்தது. தனது மனத்திரையில் அனுமனே முன்கூட்டியே தனக்கே உரிய தீர்க்க தரிசனத்துடனும் மேதா விலாஸத்துடனும் நடத்தி விட்ட ராமபட்டாபிஷேக திருக்கோலமே இந்த திவ்ய மந்த்ரம்.

சிறைவாசம் நீங்க கேதுவின் அருள் நாட வேண்டும் என்று சோதிட வல்லுனர்களின் கருத்து. வனவாசம், லங்காவாசம் ஆகியவற்றிலிருந்து மீட்சி கூறப்படுவதால் இந்த மந்த்ரம் கேது கிரகத்துடன் தொடர்பு உடையது. மேலும் ''கேது'' என்றால்

கொடி என்றும் பொருள். இங்கே, ராமன் வெற்றிக் கொடியுடன் அயோத்திக்கு திரும்புவதை குறிப்பாக உணர்த்துவதால் "கேது"வுடன் தொடர்புடையது. நவரத்ன மாலையில் **வைடூர்யம்** இதன் இருப்பிடம். அதுவே கேதுவுக்கு பிரியமான ரத்தினம்.

இந்த மந்த்ரத்தின் பலன்:— ஸகல கார்யஸித்தி, அஷ்ட ஐசுவரியம், மக்கள் பாராட்டு, துன்பங்களி லிருந்து விடுதலை, மங்கள நிகழ்ச்சிகள் ஆகியவை யாகும்.

இத்துடன் இந்த நவரத்ன மந்த்ரமாலை மங்கள கரமாக, ராம பட்டாபிஷேகத்துடன் நிறைவு பெறு கிறது.

---

குறிப்பு:—

ஸம்ஸ்க்ருத பாஷையில் கொடுக்கப்பட்ட மூல சுலோகங்களின்படி உச்சரிப்பது நலம். பரிச்சயம் இல்லாதவர்கள் தெரிந்தவர்களிடம் கேட்டுப்பழகிக் கொள்வது சிறந்தது.

இந்த நவரத்ன மந்த்ரமாலையை மனப்பாடம் செய்து, தினமும் பாராயணம் செய்து, ஒவ்வொரு மந்த்ரம் வாயிலாக, ஒவ்வொரு ரத்தினத்தை தொடுத்து ஒன்பது மணிகள் கொண்ட நவரத்ன மாலையை ஸ்ரீராமபிரானுக்கு அணிவிப்பதாக மனத்தில் பாவித்து சமர்ப்பிக்க வேண்டும்.

---

(All Rights reserved by the author including design on Cover)